# திராவிடநாடு

9—8—59 | வார வெளியீடு | விலை 16 காசு


"ஓடும் நதியும், பாடும் குயிலும், பறக்கும் சிட்டும், வண்ணக்கிளியும், எங்கேயிருக்கின்றன தெரியுமா? இவருடைய விரலிலிருக்கின்றன!" என்றார், நண்பர் ஒருவர், **கே. மாதவன்** அவர்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது. இழந்தும் இழக்காமலிருக்கும் பல கலைச் செல்வங்களுக்கு உயிர் கொடுத்தும், உயிர் பிழைக்கவைத்துக்கொண்டுமிருக்கும் ஓவிய வல்லுநர்களில், தலைசிறந்தவர், **மாதவன்** அவர்களாகும். அப்பேற்பட்டமாமேதையை 'ஓவியர்கழகம்' இந்த ஆண்டு பொன்னாடை போர்த்தி, புகழ்முடி சூட்டிக்கடந்த கிழமை சென்னையிலே கவுரவித்தது. நிதியமைச்சர் **சுப்பிரமணியம்** அவர்கள் தலைமையில், நடிக உலகச் செல்வர் **டி. கே. சண்முகம்** அவர்கள் பொன்னாடை போர்த்தி உவகை ததும்ப, மாதவனாரின் நாடக உலகப் பணியினைப் புகழ்ந்துரைத்தார். நண்பர்கள் **மு. கருணாநிதி டி. வி. நாராயணசாமி, கே. ஏ. தங்கவேலு, சக்தி கிருட்டினசாமி, ஜி. உமாபதி** முதலியோர், ஓவிய மேதையைப் பாராட்டிப் பேசினர். கடைசியில் **அண்ணாதுரை**, ஒப்பிலாத அந்த ஓவியப்புலவருக்கு, **"ஓவிய மன்னர்"** எனும் பட்டத்தை, அகமும் முகமும் களிக்க எடுத்தணிவித்தார். குவலயமே பாராட்டவேண்டிய அளவுக்குக் கைத்திறனும் செயல் வன்மையும் படைத்தவர்கள் உண்டு இங்கே! ஆனால், உரியதொரு பெருமையினை, உணர்ச்சியில்லாத ஒரு வடவராட்சிக்குள் அடைபட்டிருப்பதால், இவர்களெல்லாம் பெற இயலவில்லை. மாதவனார் போன்றோரின் வண்ண ஓவியங்களைப்பற்றி ஒரே நாடு என்றுரைக்கப்படும் இந்த **'இந்தியா'**வின் இன்னொரு பகுதிக்கே இன்னும் தெரியாது என்றால், அது பொய்யல்ல! பாரதியார் என்றாலே, யார் என்று கேட்கும்வடக்கில், நமது பத்தரைமாற்றுப்பசும்பொன்களுக்கு எங்கிருந்து மதிப்பு ஏற்படப்போகிறது!



எனினும், இதையெண்ணி, நம்மவர்களை நாமும் மறந்துவிடாமலிருக்கும் வகையில், பொன்னாடையும் புகழ்முடியும் சூட்டுவது அவர்களைப் பெருமைப்படுத்துவதோடுமட்டுமின்றி, நமதரும் கலைமாமணிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் தரும் பெருஞ்செயலாகவும் அமையும். அதிலும் ஒரே தொழிலில் ஈடுபட்டோர் அத்தொழிலிலுள்ள இன்னொருவரின் சிறப்பினைப் பாராட்டினால் தன் பெருமை குன்றுமோ என்று **'கணக்குப்போடும்'** கன்றுவிக் கோலமிக்க இக்காலத்தில், ஓவியத்தொழிலில் ஈடுபட்டோர் அனைவரும் ஒன்றுகூடி ஒருவரைப் பாராட்டுவதென்பது, போற்றக்கூடிய செயலாகும். இந்தப் பாராட்டுவிழா முயற்சியில் பங்குகொண்ட அத்தனை ஓவியர்களையும், ஓவியர் கழகத்தின் துணைத் தலைவரான ஆர். மாதவனையும் பாராட்டுகிறோம். வாழ்க ஓவிய மன்னர் கே. மாதவன்! வறுமையிலாத வாழ்வு பெருகுக அவருக்கு!!

## ★ 'ஓவியமன்னருக்கு' பாராட்டு. ★

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும், தபால் மூலமும், ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப்பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்.

# The School of English Learning

# ஆங்கிலக்கல்வி நிலையம்

**60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.**

## தமிழ்

## எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

# ஒரே வருடத்தில்

**ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி**

## அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

# இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்திசெய்து

**24-8-59-ந் தேதி**

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

**25-8-59-ந் தேதி**

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப் போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

*ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.*

**முக்கிய அறிவிப்பு:—**

1. 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம்.
3. இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகப் பயிற்சியளிக்கப்படும்.
4. இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் பெண்களும் சேரலாம்.

*அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும், (8-புதிய காசுகள்) எட்டு நயே பைசே தபால்தலை அனுப்பிப் பெறுக.*

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில், உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

# வஞ்சக நாடகம்!

[8] ஆண்டுச் சந்தா ரூ. 8. (9—8—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 4

இதுபோல் என்றும் நடந்ததில்லை—முகத்தைத்
தாங்கப்போட்டுக்கொண்டு வெளியில் வந்தார் —
ம்முரமான தாக்குதலுக்கு ஆளானார்—அவருடைய
ாழ்க்கையிலேயே குறிப்பிடக்கூடிய ஒரு சோக சம்ப
ம், என்றெல்லாம் இந்தக் கிழமை டில்லியிலே நடந்த
ாங்கிரஸ் பார்லிமெண்ட் உறுப்பினர்களின் கூட்டத்
தைப்பற்றி ஏடுகள் வெளியிட்டுள்ளன! பிரதமர் நேரு
ண்டிதர் அவர்கள், பெரியதொரு கண்டனத்துக்கும்
கலிக்கும் ஆளானாராம்!! அண்மையில் கேரளத்து
ஆட்சியில் டில்லி தலையிட்டு, தனது தர்பாரை நிலை
ாட்டிக்கொண்ட போக்குக்குக் காங்கிரஸ் எம். பி-க்கள்
த்தியிலேயே இடியும் மின்னலும் எழும்பிற்றும்.

கலந்துகொண்ட பலர், நேருவையும் டில்லி அர
சையும் கண்டித்தனராம்; கூடாத நடவடிக்கையெனக்
உறிக்கோபமாரிபொழிந்தனராம்; கூச்சலும் எதிர்ப்பும்
லமாக இருந்ததாம். அக்கிரமம்—சனநாயகம் சாகடிக்
ப்படுகிறது. டில்லி தர்பாரின் ஆதிக்கம் நீளுகிறது
—ஆண்டிடும் அரசை வேண்டுமென்றே வீழ்த்திவிட்
னர்—என்றெல்லாம் நல்லோர் பேசுகின்றனர்!
அதுமட்டுமல்ல, இந்தக் கொடுங்கோன்மைக்கெல்
லாம் எந்தக் கட்சி காரணமோ அந்தக் காங்கிரசுக்
கட்சியின் பார்லிமெண்ட் உறுப்பினர்களும்கூடக் கண்
க்கின்றனர்!! அதிலும், காங்கிரசுத் தலைவி இந்திரா
வின் காதல் கணவர், நேரு அவர்களின் செல்ல மரு
கன் பிரோஸ்காந்தியே, இந்த அட்டகாசப் போக்கை
வகு ஆத்திரத்துடன் கண்டித்திருக்கிறாரெனின்,
டில்லி செய்தது வஞ்சகம் என்பதை விளக்கத்
தேவையில்லை!! வேகமான வார்த்தைகளில் நேரு
அவர்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார் பிரோஸ்
காந்தி:

**மத்திய அரசு, கேரளப் பிரச்னையின் ஒவ்வொரு கட்டத்
திலும் மாபெரும் தவறிழைத்திருக்கிறது.**

**கூறிவந்த கொள்கைகளை நாம்—காற்றிலே பறக்கவிட்டு
விட்டோம்!**

**பார்லிமெண்டும், சட்டசபையும் பெரிதல்ல; பலர் கூடிக்
கூச்சலிட்டால் போதும் என்கிற முடிவுக்கு வந்துவிட்டோம்.**

**அதிருப்தி இருந்திருக்கலாம், ஆளும் கட்சியின்மீது! அதற்
காக, காங்கிரஸ்கட்சி செய்திருப்பது என்ன? சாதிபேசுவோ
ருடனு கூடிக்குலவுவது! வருப்புவாதம் பேசுவோருடனு ஒன்று
கூடி வாழ முயற்சிப்பது! மதவாதிகளுடன் சேர்ந்துகொண்டா
மார்தட்டும் பரிதாபத்துக்குப் பலியாகவேண்டும்!!**

**ஒன்று தெரியவேண்டும் — கடந்த இரண்டு மூன்று மாத
காலங்களில் கேரளத்துக்கு 'வெளி'யிலிருந்து ஏராளமான பணம்
போயிருக்கிறது! ரிசர்வ் பாங்கை கேட்டால், எப்படியெப்படி
யென்கிற விபரத்தைப் பெறமுடியும் நாம்! இதைப் பெற
வேண்டும்!!**

உலகம் போற்றும் உத்தமரான மாமனார்; உப
கண்டத்துக்கே தலைவியாக விளங்கும் அருமை
மனைவி, இந்த இரண்டுபேரையும் விட; நடைபெற்
றுள்ள அக்கிரமம் வலிவுள்ளதாகத் தெரியவே,
அடக்கமுடியாத நிலையில் அள்ளிக் கொட்டியிருக்
கிறார் உள்ளத்து உணர்ச்சியை! 'அடபோய்யா—
அகில உலகத்துக்கு நீதி போதனை வழங்கும் நேரு
வுக்கா நீ புத்தி சொல்லவந்தாய்—அழியவேண்டிய
கட்சிதானே கம்யூனிஸ்டுக் கட்சி — சரியான சமயம்
பார்த்துத் தலையில் குட்டியிருக்கும் சாமர்த்தியத்தைப்
புகழாமல், சண்டமாருதமெனக் கண்டிக்கிறாயே' —
என்றுதானே, கூடியிருந்த எல்லா மெம்பர்களும்
எதிர்த்துக் கிளம்பியிருக்கவேண்டும்! அதுதா
னில்லை!!

**"அனைவரும் கைதட்டி, பிரோஸ் காந்தி பேசிய
தும் உற்சாக முழக்கமிட்டனர்."**

என்கிறது, செய்தி. காந்தியின் அடுத்த வாரிசாக
விளங்கும் நேருபண்டிதர்மீது, கண்டனக் குவியல்கள்
சரம்போல வீசப்படுகின்றன—சபையினர் கைதட்டி
'பேசு, பேசு' என்று ஆரவாரித்திருக்கின்றனரெனின்,
இது நேரு அவர்கள்மீது ஏற்பட்டுள்ள அதிருப்தி
எனமாட்டோம் நாம், அவர் கேரளத்தில் செய்துள்ள
சனநாயகக்கொலையினைவிரும்பவில்லை— காங்கிரசிலும்
பலர், என்பதையே உணர்த்துகிறது. பிரோஸ்காந்தி
பேசியதும், மகாவீர் தியாகி எழுந்து, "நண்பர்களே!
எதிர்க்கட்சிகள் நமக்குக் குழிதோண்டுகின்றனவோ,
என்னவோ; நமக்குள் நாமே குழிதோண்டிக் கொள்ளு
கிறோம் என்பது மட்டும் உண்மை" என்று பேசினா
ராம். இப்படி அவர், குறுக்கிட வேண்டிய அளவுக்கு,
வேகமும், காரமும், சூழ்ந்திருக்கின்றன நேருவை!


துயர பிம்பமாக; வாழ்நாளில் அடையாத குழப்பத்துடன், வந்திருக்கிறார் நேரு வெளியே!!

சதீக் அலி என்பார், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்— இந்திராகாந்திக்கு அடுத்தபடியாக, இந்த உபகண்டத்துக் காங்கிரஸ் கட்சியின் ஏற்றமிகு இடத்திலிருப்பவர். சனாதிபதி உத்தரவிட்டதும், தன்னைச் சந்திக்க வந்த நிருபரிடம் அவர் தகவல் தந்திருக்கிறார். கேரளத்தில் நடந்தது அக்கிரமம், டில்லி தலையிட்டு அக்கிரமத்துக்கு ஆளாகாமல் கேரளத்து மக்களைக் காப்பாற்றிவிட்டது; இப்படித்தானே, கட்சியின் பொதுக்காரியதரிசி பேசியிருக்கவேண்டும். இல்லை! அவருடைய உள்ளத்திலிருந்தும் பெருமூச்சும், வேதனையுமே வெளிப்பட்டிருக்கிறது. ஏதோ, வேண்டாத ஒரு காரியத்தை, செய்துவிட்டவர்போல, என்ன செய்வது? எங்களுக்கே யோசனைதான்! என்ன செய்வது! வேறு வழியே தெரியவில்லை! என்ன செய்வது? கூடாதென்றுதான் மத்திய சர்க்காரும் நினைத்தது! என்ன செய்வது? கடைசியில், கேரளத்துச் சர்க்காரை 'டிஸ்மிஸ்' செய்ய நேர்ந்துவிட்டது! என்ன செய்வது?— என்றிருக்கிறார் அவர்!!

இருபத்தேழு மாதங்களாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சி நடத்திவந்த கம்யூனிஸ்டுகளின் அரசு, டில்லி பீடத்தின் ஒரே ஒரு உத்திரவு மூலம் வெளியேற்றப்பட்டது நியாயம் என்று துணிந்துரைப்போர் எவருமில்லை. எவரெவர் துணிந்து சொல்கிறார்கள் எனின், காங்கிரஸ் தலைவி இந்திரா சொல்கிறார், அவரது தந்தை நேரு சொல்கிறார், அந்தக் குடும்பத்திலும் இந்திராவின் கணவரே இதனை ஏற்கமறுத்துக் கண்டிக்கிறார்! இதேநிலை, காங்கிரஸ் மேலிடத்திலும், கீழிடங்களிலும் இல்லாமலில்லை. இப்படி டில்லிபீடம் தலையிடும் சம்பவம் நடப்பதற்கு முன்பே காட்கில் கிளப்பிய கண்டனம் பலருக்குத் தெரிந்திருக்கக் கூடும். பஞ்சாப் மாநிலத்தின் இந்நாள் கவர்னர் அவர்! 'பாரத நாட்டின்' முன்னாள் அமைச்சர்!! அவர், "இதுபோல ஒரு மாநில அரசின் பிரச்னைகளில் மத்திய பீடம் தலையிடுவது சனநாயகத்தை வளரவிடாது," என்று துணிவுடன் எடுத்துச் சொன்னார். இன்று, எதிர்க்கட்சி ஆட்சியென்பதால், கேரளத்தில் 'ஓடு' என்று உத்தரவிடுவது சுலபமாகிவிட்டது டில்லிக்கு! ஆனால், இதேபோலப் பலத்த மெஜாரிடியுடன் இயங்கும் ஒரு காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து, இவ்வளவு கிளர்ச்சிகளும் கண்டனங்களும் நடந்திருந்தால், தலையிட்டு அச்சர்க்காரை 'போ' என்று சொல்லுமோ, டில்லி? ஒருநாளும் சொல்லாது! யாருக, அந்தக் காங்கிரஸ் மந்திரி சபையின் கரத்தை வலியூட்டி, கிளர்ச்சி செய்வோரை நசுக்க என்னென்ன உதவி செய்யவேண்டுமோ, அத்தனையும் செய்திருக்கும். கேரளத்தில், 'டில்லிபாண பாய்வதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன் பல திசைகளிலிருந்தும் இராணுவம், கொண்டுவந்து குவிக்கப்பட்டதாம்! ஒருவேளை, டில்லியின் உத்தர கண்டு, "இந்த டில்லி என்ன சொல்வது! நாம் என்ன கேட்பது!," என்று கம்யூனிஸ்டுகள் மறுத்துவிட்டால், அவர்களைக் காரியாலயத்திலிருந்து வெளியேற்றியனுப்ப, பாரதப் படைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவும் கூடும். ஏதோ, ஒரு வெளிநாட்டின்மீது படையெடுக்கப் போவதுபோல, பயமுறுத்தலும் கட்டாயமும் ஏவப்பட்டிருக்கிறதே ஒழிய, கண்ணிய உணர்ச்சி கொஞ்சமும் காட்டப்படவில்லை! "கேரளத்தில் மட்டும்தானா இப்படிப் படை போயிற்று? முன் எந்த மாகாணத்துக்கும் இப்படி அனுப்பப்படவில்லையே?," என்று கேள்வி எழக் கூடும். இன்று டில்லி நிதியமைச்சராயிருக்கும் மொரார்ஜி தேசாய் பம்பாய் மாநிலத்தின் முதலமைச்சராயிருந்த போதும் இப்படியொருதடவை, படைகள் அனுப்பப்பட்டதுண்டு! அப்போது படைகள், மக்களை அடக்கி, மாநில அரசைக் காப்பாற்றச் சென்றன—இப்போது கேரளத்துக்கு வந்த படைகள், அரசைக் காப்பாற்ற துளிகூட முனையவில்லை என்பது மட்டும் உண்மை!!

எதிரியின் காலை வெட்டு—என் கட்சிக்கு எதிராகவா பேசுகிறான், தள்ளு சிறையில் — திமிரை அடக்கு—தெருவில் இழுத்துத்தள்ளு, என்று இப்படி எக்காளம் எழுப்புகிறது பாகிஸ்தான் என்று அனுதினமும் வர்ணிப்பவர்கள் காங்கிரஸ்காரர்கள்! அங்கு வாழும் அயூப்கான் ஒரு சர்வாதிகாரி—அங்கே சனநாயக வாடையையோ — சமநோக்கையோ — அன்பு நெறியையோ—அறவழியையோ—யாரும் எதிர்பார்ப்பதற்கில்லை!! நேரு அப்படிப்பட்டவரல்ல — அமைசான் நதித் தீரமும், வால்கா நதிக்கரையும், செஞ்சின மன்றமும், வாயிருந்தால் செப்பும், சனநாயகம் பற்றி அவர் சாற்றியுள்ள உரைகளை. சகிப்புத்தன்மையும் எதிர்க்கட்சிகளுக்கு மரியாதையும் கொடுத்து, சனநாயகத் தேரை இழுத்துச் செல்கிறோம் நாங்கள் என்று இதுநாள் வரை பெருமைபேசி வருகிறவர் நேரு. குருஷேவிடம் குலவிய சமயத்திலும் சரி, ஐசனோவரிடம் அளவளாவிய நேரத்திலும் சரி, சர்ச்சிலைச் சந்திக்கும் சந்தர்ப்பத்திலும் சரி, 'சனநாயகம்! சனநாயகம்!' என்று சண்டமாருதமெனச், சாற்றத் தவறியதில்லை அவர். அந்த சனநாயகம், கட்சி நாயகத்துக்காக, படுகொலை செய்யப்பட்டிருக்கிறது கேரளாவில்! கொலைக்குக் காரணமும் குணவிளக்கு என்று கொண்டாடப்படும் நேரு அவர்கள்!! அதனால்தான், காங்கிரஸ் பார்லிமெண்டுக் கட்சிக் கூட்டத்திலே, தன்னுடைய நடவடிக்கைக்குத் தக்கபதில் சொல்லமுடியாது தவித்துப்போய்த் திணறி, வெதும்பிய மனமும் சோம்

(15-ம் பக்கம் பார்க்க)



# மதுங்காபுரி மாதரசிக்கு!

வடநாட்டிலுள்ள பம்பாய் போன்ற இடங்களில் வாழும் தென்னாட்டினர் மத்தியில் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து வருவதைத் தெரிவித்திருக்கிறார் ஒரு அம்மையார்! எரிச்சலில் பேனாவைத் தோய்த்து 'இந்து' இதழிலே, கடிதமூலம் அறிவிக்கிறார் அவர்!! பம்பாய் மாநகரிலே பலம் பெற்றுவிட்டது — கழக ஏடுகள் காணுமிடமெல்லாம் விற்கப்படுகின்றன-ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்களைப் பதிவு செய்து வைத்திருக்கிறது—அடிக்கடி பொதுக்கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்துகிறது—அவர்களது கட்சித் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புவைத்திருக்கிறது — எப்படியோ இந்த 'நஞ்சு' வெகு அதிகமாகப் பரவி வருகிறது என்று அங்கலாய்க்கிறார் அந்தச் சகோதரி. பாலிருக்க நஞ்சையும், இனிப்பிருக்கக் கசப்பையும் நாடுவார் எவரும்? வளருகிறது தி. மு. க. என்று வருத்தத்துடன் உரைக்கவந்த அம்மையார், இதுபோலக் காங்கிரசோ, பி. எஸ். பி. கட்சியோ பம்பாய்வாழ் தமிழர்களிடம் வளரவில்லையே என்கிற வயிற்றெரிச்சலையும் கொட்டியிருக்கிறார்! அம்மையார் மதுங்காபுரி வாசியென நம்புகிறோம். பம்பாயிலேயே மதுங்காபுரியில்தான், மனதில் எரிச்சலும் அந்த எரிச்சலைப் போக்க எவ்வழி நாடலாம் எனும் வேகமும் கொண்ட வனிதாமணிகளும் அவர்தம் வாத்சல்யத்துக்குரிய கணவன்மார்களும் உண்டு. அதுஒரு உல்லாசபுரி! உட்கார்ந்து இதைப்பற்றியெல்லாம் நினைக்கும் அளவுக்கு ஓய்வுபெற்ற, மாதர் மணிகள் ஏராளம். செல்வாக்கு நிரம்பியோரும், சிங்காரமான வாழ்வை அனுபவிப்போரும் நிரம்பிய மதுங்காவில், இங்கிருந்து போய் வாழும் தமிழர்களுக்கென, "பம்பாய்த் தமிழ்ச்சங்கம்" என்று ஒன்றுளது. பணக்காரச் சங்கம்! அமைச்சர்களின் புன்சிரிப்பும், ஆலையதிபர்களின் தொடர்பும் நெருக்கமாகப் பெற்ற, வசதியுள்ள சங்கம்!! அந்தச் சங்கம், நம்மைப் போன்றோரைத் தமிழர்களென்றே கருதுவதில்லை. அப்படிப்பட்ட வலிவும் வசதியும் பெற்ற சங்கமிருந்தும், 'நஞ்சு' பரவுகிறது எனின், பரவுவது நஞ்சா பாலாமிர்தமா எனும் ஐயம் எழத்தான் செய்யும் எவருக்கும்!!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் எவரெவரிடத்திலே பரவுகின்றன என்பதற்கும் அம்மையார், விளக்கமான பட்டியல் தந்திருக்கிறார்கள். மிகப்பெரிய

அண்ணால்

ஆலையூராயிற்றே, அந்த ஆலையரசர்களின் நன்கொடையிலே, இந்த நாரீமணி நடுங்குமளவுக்கு வளர்ச்சியைப் பெறுகிறதா நமது கழகம் என்று கேட்கத்தோன்றும்! கழகத்திலே சேர்ந்திருப்பவர்கள் கனவான்களல்ல, அவர்களது காரோட்டிகளாக இருப்போர்! சீமாட்டிகளல்ல, அவர்தம் மாளிகைகளிலே, சிந்துவாரற்ற நிலையில் வேலைக்காரர்களாகப் பணிபுரிவோர்! வீதியிலே 'பூட்பாலிஷ்' போடுவோர்! வேதனையை வாழ்வாக அனுபவித்து வருகிறவர்கள்!—இவர்கள் தாம், கழகத்தில் இருக்கிறார்களாம் அம்மையாரே தெரிவிக்கிறார்.

முன்பெல்லாம் படித்த மத்திய தர வர்க்கத்தினர் மட்டுமே பம்பாயை நோக்கி வருவார்களாம்! இப்போது யார்யாரோ பம்பாய்க்கு வந்து குழுமிவிடுகிறார்கள், என்றும் குறைபட்டுக்கொள்கிறார் தோழியர்!!

ஏன், யார்யாரோ பம்பாய்க்கு வருகிறார்கள்—அப்படிப் பம்பாய்க்குப் போனதும், அவர்களுக்கெல்லாம், பாதாம் அல்வாவும் பால் பேணியுமா சாப்பிடக்கிடைக்கிறது என்று அறிய ஆசை தோன்றும். அம்மையார், அதற்கும் விளக்கம் தருகிறார்:

> பம்பாயில் பலசேரிகள் உள்ளன; அங்கெல்லாம் வாழ்வோர் தென்னாட்டவர்கள் தான்.
>
> இரயில்வே பிளாட்பாரங்கள், இரயில் பாலங்கள், போக்குவரத்து மேடைகள், இங்கெல்லாம் வசிக்கிறார்கள்.
>
> பம்பாயின் சமூகநல அமைச்சர் திரிபுடே கூற்றுப்படி, பம்பாயிலுள்ள பிச்சைக்காரர்கள் எல்லாம் தெற்கேயிருந்து வந்தவர்கள்தான்.
>
> பரிதாபமான நிலையில் வாழும் காட்சி மகாகோரம்.
>
> ஆடையில்லாத குழந்தைகள், வயிறு காய்ந்த சின்னஞ் சிறுசுகள், வீதிகளில் பிச்சையெடுக்கும் அலங்கோலம் எவருடைய இருதயத்தையும் பிழியும்.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே மிகப்பெரிய சீமானூர் பம்பாய்.

நூற்றுக்கு மேலான ஆலைகள் உண்டு அங்கே. பணம் புரளும் டாடாவும் டால்மியாவும் பிர்லாவும் பஜாஜும் பெருமையோடு வசிக்கின்ற ஊர். நினைத்தால் இந்த உபகண்டத்தையே ஆட்டிவிடக் கூடிய அளவற்ற செல்வவான்கள் உள்ள இடம்! அவர்கள் வசம் தான், 'இந்தியா'வின் பணத்தோட்டமே உள்ளது!! அப்படிப்பட்ட ஊருக்குப் பிழைக்க வழிதேடி ஓடுகின்றனர் தமிழர்கள். அப்படி அவர்கள் ஓடக் காரணம் என்ன? அம்மையார் அதனையும், விளக்கத் தவறவில்லை.

**"தென்னாட்டிலுள்ள பல பகுதிகளில் பொருளாதார நிலை சரிவர இல்லாததால், யார்யாரோ, பிழைப்புக்காகப் பம்பாய்க்கு வந்து குழுமுகிறார்கள்"**

இங்கே டால்மியா வருவதும், சுராஜ்மல் தெரிவதும், டாடா நகர் ஏற்படுவதும், சௌகார்பேட்டை உருவாவதும் நடக்கிறது! வடக்கேயிருந்து இங்கே வருகிறவர்கள் பிச்சைக்காரர்களாக இல்லை — பிளாட்பாரங்களிலே தூங்குவது இல்லை—ஆடையிலாத குழந்தைகளோடு அலைவது இல்லை. **வடக்கேயிருந்து வந்த ஒருவன் பிச்சைக்காரனாக அலைவதைக்கூட நாம் காணமுடியாது—** வந்து தெருத் தெருவாக அலையும் பய்யிராகிகூட ஏதோ மருந்துகளை உருண்டையாக உருட்டி வைத்துக் கொண்டு நாளொன்றுக்கு ரூ. 50, 100 சம்பாதித்து விடுகிறான்! ஆனால், இங்கேயிருந்து போகிறவர்கள், அம்மையாரின் இதயம்கசங்குமளவுக்கு அலைகிறார்கள்!! என்ன காரணம்? இவர்களது தென்னாட்டு மண் என்ன பனிக்காடா, மணல் மேடா! பொன்விளையும் பூமிதான்!! ஆனால், பொன்னெல்லாம் போய் விடுகிறதே வடக்கே — வாழ ஒரு வேலைதேடவேண்டுமெனில், ஆலையிருப்பது அங்கன்றோ? தெற்கே பொருளாதார நிலை சரியில்லாததால் பம்பாய்க்கு வந்து சேருகிறார்கள்—என்று விளக்கம் தெரிவிக்கும் வேதியகுலத்து அம்மைக்கு, ஏன் இங்கு மட்டும் பொருளாதார நிலை சரியாகவில்லை என்கிற கேள்விக்குப் பதில் கண்டுபிடிக்க நேரமில்லைப் போலிருக்கிறது! கழகம் வளருகிறது என்பது தெரிந்தளவுக்கு அதன்காரணம்புரியவில்லைப் போலிருக்கிறது!! சோகத்துடன் சொல்கிறார்,

**"இப்படி அவதிப்படும் மக்கள் மத்தியில்தான் தி. மு. க. செழித்து வளருகிறது",**

வேறெதற்கு தி. மு. க. ஏற்பட்டது? வேறு யாருக்காக தி. மு. க. உண்டாயிற்று? தென்னாட்டைச் சேர்ந்த எவன் வாழவழியின்றி ஓடுகிறானோ, அவனுக்காக; பொன்னாட்டில் பிறந்தும் மண்ணைவிடக்கேவலமாக எவன் வாழ்கிறானோ, அவனுடைய கண்ணீரைத் துடைப்பதற்காகஉருவானதுதான்திராவிடமுன்னேற்றக் கழகம்! அப்படிப்பட்ட கழகத்தின் கொள்கைகள்-மதுங்காபுரி வாசிகளுக்கும் அங்கு வாழ் மனோகரிகளுக்கும், மாளிகை வாசிகளுக்கும், 'நஞ்சாக'த் தோன்றும்! உண்மையில், அவர்களுக்கு நஞ்சாகத் தோன்றுவதுதான் நமக்கும் பெருமை!! சீமான்வீட்டுச் செல்லப் பிள்ளையல்லவே தி. மு. க.? அதனால்தான், பம்பாய் சென்று பரதவிப்போர், தமது தோன்றாத் துணையென, தமது துயர்துடைக்கும் பாலாமிருதமெனக் கருதுகின்றனர் கழகத்தை!! அக்கழகத்தின் கொள்கைகள், வந்து வாடும் தம்மவர் மனதிலே பதியவேண்டும் எனப் பாடுபடுகின்றனர்!!

ஒட்டாண்டியாக ஓடுகிறான்.

ஒரு வேளை சோற்றுக்கே அலைகிறான்.

ஒண்ட இடமின்றித் திரிகிறான்.

ஊரெல்லாம் பிச்சையெடுக்கிறான்.

'பூட்சு' துடைக்கிறான்!

பூவையரின் துணிகளைத் தோய்க்கிறான்!

சேரியில் வாழ்கிறான்!

'தாராவி'யெனும் சாக்கடைக் குளத்தில் வசிக்கிறான்!

குழந்தை குட்டிகள் பரதவிக்க அலைகிறான்!

அம்மட்டோ? இன்னும் சொல்வேன் கேளீர், என்றும் சாற்றுகிறார் அம்மையார்!!

**"ஏழ்மையும், சேரியில் படும் அவதியும் ஏராளமான தென்னாட்டு வாலிபர்களைக் குற்றங்கள் புரியத் தூண்டுகிறது. எந்த பம்பாய்த் தினசரிப் பத்திரிகையை எடுத்துத் திருப்பினாலும், இது தெரியும். தமிழ் பேசும் வாலிபர்கள், ஏன்? பெண்கள்கூட—இப்படிக்குற்றவாளியாகி வரும் கோரம், போலீஸ்கோர்ட்டு நடவடிக்கைகளைப் பார்த்தால் புரியும்."**

வாழ்க்கையை வெறுத்து பஞ்சமா பாதகங்களுக்கும், வாழச் சென்றவன் துணிகிறான் என்றால், அந்தளவுக்கு வறுமை அவனைத் துரத்துகிறது என்கிறார் அம்மையார். வளமுள்ள நாட்டில் பொருளாதாரநிலை சரியில்லாததால் ஓடி வந்தவன் என்பதையும் உரைக்கிறார்! அப்படிப்பட்டோர் மத்தியில்,

**திராவிடநாடு**
**திராவிடருக்கே**

எனும் உரிமை முழக்கம் கிளம்புவதை மட்டும் நஞ்சுடன் ஒப்பிடுகிறார்! இந்த மக்களிடம், இந்தக் காங்கிரசோ, பி. எஸ். பியோ புகாமல், தி. மு. க செல்வாக்கு பெறுகிறதே என்று ஓலமிட்டு ஒப்பாரி வைக்கிறார்!! பசித்தவன், தனக்கு ஒரு கவளம் சோறு தருபவனைத்தான் பார்ப்பானே ஒழிய 'பஜகோவிந்தம்' பாடும் புண்ணாக்கு வயிறனை, ஏறெடுத்தும் பாரான். காங்கிரசுக்கு, கடல் கடந்த தமிழர் குறித்தும், எல்லை கடந்த தமிழர் பற்றியும் எண்ண ஏது நேரம்? பம்பாயும் இந்தியா தானே!—எனக்கூறும் காங்கிரஸ் அம்மை, பம்பாய்க்கு இந்த ஏழை எளியவர்கள்வந்துகூடிச்சுகத்தைக் கெடுத்துவிடுகின்றனரே, என்கிறார். சுகமான கட்சி வராமல், சுதந்திர முழக்கம் செய்யும் கட்சி உருவாவது, எரிச்சலாயுள்ளது அம்மைக்கு! இருக்கும் இழிவுபற்றி விளக்கம் தருகிறார்— "இவர்களெல்லாம் ஏன் இங்கே வந்து தமிழர்கள் என்றால் இப்படித் தானிருப்பார்கள் என்று மதுங்காபுரியில் மனோரம்யத்துடன் வாழும் எங்களைப்போலில்லாமல், நமது தமிழ் நாட்டுக்கு அவமானம் தேடித் தருகிறார்கள்," என்கிறார், மானாபிமானம், பம்பாய்த் தமிழ்ச் சங்கத்திலே உல்லாச விருந்து நடத்தி, உறவாடுவதிலே இல்லை! அவர்கள் பிறந்த மண்ணில் வாழும் ஒவ்வொரு மனிதனும் எ

(8-ம் பக்கம் பார்க்க)

# பிஞ்சில் பழுத்தது

மாணவர்கள் அரசியலில் ஈடுபாடு கொள்ளுவது அவர்களது படிப்புக்குத் தடையாக இருக்கிறது என்று சொல்லாதவர் இல்லை எனலாம். ஏதேனும் ஒரு கல்விக்கூடத்தில் பேசும் வாய்ப்புக் கிடைக்கும்போது தங்களைப் 'பெரிய மனிதர்' என்று கருதிக் கொள்வோர் "மாணவர்களே அரசியலில் ஈடுபடாதீர்கள்; அது ஆபத்து" என்று "அறிவுரை" கூறுகின்றனர். அவருள்ளும் சிலர் ஆசிரியர்களை மட்டும் விட்டு விடுவானேன் என்று கருதி, ஆசிரியர்களே, உங்களையும்தான்—அரசியலில் உங்களுக்கு வேலை இல்லை" என்று அச்சுறுத்திவிட்டு வருகின்றனர்.

அரசியலில் ஈடுபடுவது,

அரசியலை அறிந்து கொள்ளுவது,

அரசியல் கிளர்ச்சியில் பங்கு பெறுவது,

என்று மூன்று நிலைகள் இருக்கின்றன. இவற்றுள் எதில் மாணவர்களும் ஆசிரியர்களும் சிக்காமல் இருத்தல் வேண்டும் என்பதைப் பற்றித் தெளிவுபடுத்துவோர் இல்லை.

ஆனால், மாணவர்களுக்கு அறிவுரை, ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை என்று எதை எதையோ சொல்லுகின்றனர்.

மாணவர்களும் ஆசிரியர்களும் கழகத்தின்பால் கொள்ளும் பற்றுதல்,காங்கிரசுக்காரர்கள் கண்களில் படும்போது,அது அவர்களை 'என்னவோ' செய்கின்றது. அதனால் எரிச்சல் மிகும் நேரத்தில் அவர்கள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் கழகம் அரசியலுக்கு 'இழுக்கிறது' என்று குற்றம் சுமத்துகின்றனர். அரசியல் என்பது யாரோ இழுத்து எவரோ போய் விழும் படுபாதாளம் அல்ல. அதில் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று இயற்கையிலேயே வேட்கை இருந்தால்தான் அரசியலில் கலக்க இயலும்.

ஆனால்,காங்கிரசுக்காரர்கள் இன்றைய நிலையில் நியாய அநியாயத்தையோ, காரண காரியத்தையோ ஒட்டி எதனையும் எண்ணுவதும் இல்லை; செய்வதும் இல்லை என்பது வெளிப்படை. ஆகையினால் மாணவர் பிரச்னையிலும் அவர்கள் மாறான போக்குக் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

சில நாட்களுக்கு முன்னர் முதலமைச்சர் காமராசர் அவர்கள் "மாணவர்கள் பிஞ்சிலே பழுத்து விடுகின்றார்கள்— அதனாலேயே தேர்விலே தவறிவிடுகின்றனர்— அவர்களைக் கெடுப்பது தி. மு. க" என்று பேசினார்.

இன்று நமது மாநிலத்தைப் பொறுத்தவரை — மாணவர்களை அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுத்துவது இல்லை என்று கட்சித் தலைவர்களுக்குள் பேச்சு நடைபெற்றிருக்கிறது. இதனை வரவேற்றும் வாழ்த்தியும், துணைக் கண்டத்தில் குறிப்பிடத் தக்கவர்கள் அனைவரும் பேசிப் பாராட்டியுள்ளனர்.

இந்த நிலையில் முதலமைச்சர் காமராசர் தி. மு. க மாணவர்களைக் கெடுக்கிறது என்று சொல்வது எந்த வகையில் நியாயம் என்பதை அவரேதான் சொல்லவேண்டும்; ஒருக்கால் கல்வியைப் பற்றிய கருத்துரை சொல்லக்கூடியவர்தானே அவர் என்றால், அதுவும் இல்லை. 'பிஞ்சிலே பழுத்ததால்' மூன்றாவது வகுப்பையே முடிவு வகுப்பாகக் கருதி மூட்டை முடிச்சோடு பள்ளிக்கூடத்தை விட்டுப் 'பரந்த உலகத்தை' நாடி வந்தவர் அவர். அவர்தான் கூறுகின்றார் . மாணவர்கள் 'பிஞ்சிலே பழுத்துவிடுவதாக'!

மாணவர்களை அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுத்துவது குற்றம் என்றால், அவர்களிடையில் நின்று அரசியல் பேசுவதும் குற்றம்தான்! அதை நமது முதலமைச்சர் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை.

சிதம்பரம் அருகில், சி. முட்லூர் என்ற ஊரில் தொடக்கப்பள்ளி ஒன்றினைத் திறந்து வைத்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.

தொடக்கப் பள்ளித் துவக்க விழா என்றால், அங்கே கல்வியின் அவசியம்—அதைப்பெறுதவர்கள் படும்பாடு— எடுத்துக் காட்டாகத் தன் நிலை— மாணவர்கள் ஊக்கத்தோடு கற்கவேண்டியதன் அவசியம்—என்று இப்படிப் பலவகையாகப் பேசியிருக்கலாம். ஆனால் காமராசர் அப்படியெல்லாம் சாதாரண சொற்பொழிவு ஆற்றிவிடவில்லை.

காங்கிரசுக் கட்சியின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தால் என்னென்ன சொல்வாரோ,எப்படியெப்படிச்சொல்வாரோ, அப்படியேதான் பள்ளித் திறப்புவிழாவிலும் பேசியிருக்கிறார்:

"காங்கிரஸ் அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டி வருகிறது. அதற்காகத்தான் வரி போடுகிறோம். அதைப் பார்த்

துத்தான் "ஐயோ கத்தரிக்காய்க்கும் வாழைக்காய்க்கும் வரிபோடுகிறார்களே" என்று முதலைக் கண்ணீர் வடித்தார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தார். இப்போது கார்ப்போரேஷனுக்கு வந்தபிறகு வரிபோடாமல் எந்தக் காரியமும் நடக்காது என்பது தெரிகிறது. எனவேதான் கூறுகின்றேன்— தி. மு. க.காரர்கள் பின்புத்திக்காரர்கள். முன்புத்தி கிடையாது என்று. பெயர் தான்முன்னேற்றம் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று ஏழைகளுக்காகவே அரசாளும் கட்சி காங்கிரஸ் ஒன்றுதான். அதனை நீங்கள் ஆதரித்தால்..."

இந்த அருமையான சொற்பொழிவு பள்ளிக்கூடத் துவக்கவிழாவில் நடைபெற்றிருக்கிறது. பள்ளிக்கூட விழாவுக்கு வந்திருந்த மாணவர்களுக்கும், பணிசெய்ய வந்திருந்த ஆசிரியர்களுக்கும் அமைச்சர் அளித்த அறிவுரை இது. அவர் பேச்சைக்கேட்ட மாணவனுக்கு,

காங்கிரஸ் என்பது ஒருகட்சி.

தி. மு. க. என்பது ஒருகட்சி, அவர்கள் கார்ப்பரேஷனுக்கு வந்திருக்கிறார்கள்.

என்று தெரிவதோடு,

காங்கிரசுக்கும் தி.மு.க.வுக்கும் ஆகாது என்றும் தெரிகிறது.

அமைச்சர் காங்கிரசை ஆதரிக்கக் கேட்டுக்கொண்டதும், அந்த மாணவன் கழகத்தார் என்ன பேசுகின்றார்கள், யாரை ஆதரிக்கச் சொல்லுகின்றார்கள் அவர்கள், என்று ஆவல் கொள்ளுகின்றான். கூட்டத்திற்கு வருகிறான். உண்மை தெரிகிறது அவனுக்கு; கழக வாடை அவன்மீது கண்டவுடன் 'ஐயோ மாணவன் அரசியலுக்குப் போய் விட்டான் என்று காங்கிரசுக்காரர்கள் அலறுகின்றனர்.

யார் அவனுக்கு அரசியல் உணர்ச்சியை ஊட்டியது? அமைச்சரின் பேச்சுத்தானே?

மாணவர்களுக்காகப் பள்ளிக்கூடம் திறக்கிறேன் என்று போய், அங்கே கட்சிப்பிரச்சாரம் அரசாங்கச் செலவில் செய்கின்றனர் அமைச்சர் பெருமக்கள்.

எங்கள் ஆட்சியில் நித்த நித்தம் புதிய பள்ளிகளைத் திறக்கிறோம் என்று கணக்குவேறு சொல்கின்றனர். ஒருவேளை இந்தப் பிரச்சாரம் செய்யத்தானோ, என்னவோ அது? யார் அறிவர்!

வேலி இடுவது பயிருக்குப் பாதுகாப்பைத் தேடி. ஆனால் வேலியே பயிரை அழிக்கும் வகையில் வளர்ந்தால் என்ன செய்வது? ஊராள வந்தவர் உத்தமர்போல் நடித்துவிட்டு அரசியலைக்கொண்டுபோய் ஆசிரியர்களிடை விதைக்கிறார்.

அரசியலை விதைக்கவில்லை—தன்னுடைய கட்சியைப் பரப்பப் பாடுபடுகின்றார்! அதற்குப் பள்ளிக்கூடம்தானா கிடைத்தது? வேண்டாம் காமராசரே, பிஞ்சில் பழுத்தவரே—வினைவிதைக்காதிர்!

✻

---

6-ம் பக்கத் தொடர்ச்சி

படி வாழ்கிறான் என்பதிலேயிருக்கிறது!! அந்த மண், தமிழ்மண், தென்னகம் எப்படியிருக்கிறது என்பதைக் காட்டும் அறிகுறிதான், அங்கே வந்து வாழமுடியாது தவிக்கும் மக்கள் கூட்டம். அவர்களைப் பார்த்து எரிச்சல் கொள்வதில் பொருளில்லை! எள்ளம் செய்வதில் நியாயமில்லை! "எங்கள் மாளிகைக்குப் பக்கத்திலே, அந்தக் குடிசையிருப்பதால், அழகு கெடுகிறது. ஆகவே, குடிசையை ஒழி," என்று சொல்வது சுலபம். தடியெடுத்து நாலுபேர் கிளம்பினால் போதும். ஆனால், அந்த மாளிகையைப் போலவே இந்தக் குடிசையும் ஒரு மாளிகையாகவேண்டும் என்று எண்ணுவதிலும், அதற்காகப் பணிபுரிவதிலும்தான் "ஆண்டவன்" இருக்கிறான்! அதனை மறந்துவிடக்கூடாது அம்மை! மதுங்காபுரி மனோரம்மியம் அவ்வளவு கல்லாக்கிவிடக்கூடாது இருதயத்தை!!

பம்பாய்வாழ் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், வளர்ந்து வரும் தாயக வேட்கைக்கு, அங்கும் வலிவு தேடுகின்றனரே ஒழிய, அங்கு போயமர்ந்துகொண்டு வடவரை வம்புக்கிழுத்து 'உள்நாட்டுப் போர்' நிகழ்த்தவில்லை. காங்கிரஸ் வளர்ந்தபோது, இன்றுள்ள கிருஷ்ணமேனன் போன்றோர், இங்கிலாந்திலும் அமெரிக்கா போன்ற ஏனைய இடங்களிலும் "இந்தியாவுக்கு விடுதலை வேண்டும்," என்று கேட்டனர். அதேபோலத்தான், தென்னாடு கடந்து, இந்த உபகண்டத்துள்ளும், கடல் கடந்து இலங்கை பர்மா மலேயா போன்ற இடங்களிலும் வாழும் திராவிட மக்கள், உரிமைக் குரல் எழுப்புகின்றனர்! இதனை அம்மை சிந்திக்கவேண்டும்—'இந்து' போன்ற ஏடுகளுக்குக் கடிதம் எழுதிவிட்டு சும்மாயிருக்கும்போது. அப்போது உண்மை தெரியும்! சஞ்சலம் அகலும்!!

✻

★

விரைவில்!

அரங்கண்ணல்

அளிக்கும்

தொடரோவியம்

துவங்கும்.

★

# கியூபாவின் விடுதலைவீரன் “காஸ்ட்ரோ”

1959-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள்! கியூபா நாட்டின் ஜனாதிபதி புல் ஜென்ஷியா பாடிஸ்டா, புத்தாண்டை வெகு கோலாகலமாகக் கொண்டாட வேண்டியவர்—பாவம்! பரிதாபம், வானவூர்தியின் மூலம் நாட்டை விட்டுத் தப்பியோடினார். இச்செய்தி கேட்டு உலகம் முழுதும் வியப்படைந்தது. வியப்படைவதற்குக்காரணம் இல்லாமற்போகவில்லை. அதுவரை உள்நாட்டில் நடந்து வந்த புரட்சிபற்றிய உண்மைச் செய்திகள் உலகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்தன.

அன்றியும், நாட்டின் இராணுவம் முழுவதுமே தன்பால் கொண்டுள்ள ஜனாதிபதியிடம் ஆங்கில நாட்டுத் துப்பாக்கிகளும், அமெரிக்கநாட்டு டாங்கிகளும், போர் விமானங்களும் இருந்தன. ஆயுத பலம் மிகுதியாக இருந்தும் புரட்சிப் படையிடம் தோல்வியுற்று நாட்டைவிட்டேவெளியேறித் தப்பினார் என்று உலகம் திகைப்புற்றது. ஆனால் புரட்சிப் படைத் தலைவன் பைடல் காஸ்ட்ரோவின் உள்ளத்தில் உரமும், நெஞ்சிலே நீங்காத நாட்டுப்பற்றும், எண்ணத்தில் திண்மையான புரட்சிக் கருத்துக்களும் நிறைந்திருந்தன என்பதை உலக மக்கள் அறிந்தார்களில்லை.

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான கியூபா, 700-கல் நீளமுள்ள நீண்ட தீவு. இயற்கை வளம் ஒருங்கே நிறைந்திருந்த இத்தீவில் உள்ள கழனிகளில் கரும்புகள் நிறைந்துகிடக்கும். கரும்புநிறையப் பயிராவதால், ஆலைகள் பலவற்றைத் தன்பால் கொண்டுள்ளது. அன்றியும் சர்க்கரை வெளிநாட்டிற்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. மாங்கனிசு, நிக்கல், தாமிரம் முதலிய உலோக தாதுக்களும் தன்பால் மிகுதியாகக் கொண்டது இச்சிறிய தீவு.

ஸ்பெயின் நாட்டு ஆட்சிப் பிடியினின்று விடுதலை பெற்ற இத்தீவு சுமார் ஐம்பது ஆண்டுகளாக உள்நாட்டுக் குழப்பங்களினால் அமைதியின்றிக் கிடந்தது. அப்பொழுது சர்வாதிகார ஆட்சி நடாத்திவந்த ஜெரார்டோ மாசெடோ என்பாரைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டு, புல்ஜென்ஷியா பாடிஸ்டா என்பவர், ஜனாதிபதி பதவி ஏற்றார். ஆரம்பத்தில் மக்களாட்சியில் நம்பிக்கை வைத்திருந்த ஜனாதிபதி பாடிஸ்டா நாள் செல்லச் செல்ல இராணுவத்தைத் தன் வசமாக்கிக் கொண்டார். முன்னோர்களின் சர்வாதிகாரத்தை எதிர்த்து வெற்றிபெற்ற பாடிஸ்டா, பிறகு தன் முன்னோர்கள் கடைப்பிடித்த

K. C. இராசசேகரன், B.A.,

வழியைக் கையாளத் தொடங்கினார். பல திட்டங்கள் தீட்டப்பெற்று ஏட்டளவிலேயே நின்றன. பொது மக்களின் வரிப்பணத்தை ஆட்சிப் பொறுப்பாளர்கள் சூறையிடலாயினர். கடனாளியாக பதவி ஏற்ற மந்திரிகள் மிகுந்த செல்வம் படைத்தவர்களாயினர்.

நாட்டினிலே அநீதியும், இலஞ்சமும், ஒழுக்கமின்மையும் தலைவிரித்தாடின. கிளர்ந்தெழும் மக்களையடக்க எஸ். ஐ. எம். என்ற இரகசியப் போலீஸ் படையொன்று நிறுவப்பட்டது. புரட்சி செய்தவர்கள் ஈவு, இரக்கமின்றி வதைக்கப்பட்டனர். நகரின் கண் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் சித்திரவதை செய்வதற்கென ஓரிடம் அமைக்கப்பெற்றதாம். இந் நிலையில்தான் புரட்சி வீரன் பைடல்காஸ்டிரோ புரட்சிக்கு வித்தூன்றினான். இருளைக் கிழித்து வெளித்தோன்றும் ஞாயிறு போன்று, சர்வாதிகார இருட்திரையைக்கிழித்துப் புரட்சிக் கருத்துக்கள் நாடெங்கும் பரவும் வண்ணம் செய்தான் மாவீரன் காஸ்ட்ரோ. காஸ்ட்ரோவின் வெற்றிக்கு அடிக்கல், அவர் வாழ்நாளில் கண்ட ஆயிரம் தோல்விகள்தான் என அறுதியிட்டுக் கூறலாம். பல முறை தோல்வி காணினும் இலட்சியத்தின் பால் கொண்டுள்ள நம்பிக்கை சிறிதேனும் குறைந்ததில்லை. அதனால்தான் கியூபா நாட்டுச் சரித்திரத்திலேயே தனியிடமொன்றை அமைத்துக் கொண்டார். அவர் வாழ்க்கைச் சரிதத்தின் முதலேடுகளைச்சற்றுத் திருப்பிக் காணுவோம்.

பைடல்காஸ்ட்ரோ, ஓரியண்ட் மாகாணத்தைச் சார்ந்த நடுத்தர குடும்பத்தில் தோன்றியவர். அவருடைய தந்தை ஏன்ஜஸ் என்பவர் வேலைசெய்து பிழைக்க அங்குவந்தவர். தன்னுடைய ஏழு குழந்தைகளுடனும் அங்கேயே தங்கி, கரும்பு விவசாயத்தில் பணி செய்தார். காஸ்ட்ரோ 13-வயது பையனாக இருக்கும் பொழுதே கோழிச் சண்டை விளையாட்டில் மிகுதியாக ஆர்வங்கொண்டு, சேவல்களைச் சண்டைக்குப்பயிற்றும் தொழிலில் ஈடுபட்டார். இவர் பழக்கிய சேவல்கள் சண்டையில் தோல்வியே கண்டு வந்ததால், அவ்வேலையை விடுத்து, கிருத்துவப் பாதிரிமார்களிடம் கல்வி பயிலத் தொடங்கினார். பின்பு பள்ளியில் சேர்ந்து படித்துப் பின் கல்லூரியில் இரண்டாண்டு படித்து முடித்தார். உலக சரித்திரம் படிப்பதில் மிகுந்த ஆர்வங்கொண்டு படிப்பார். அப்பொழுதே நண்பர்களின் துணையுடன் ஆட்சியினரின் சர்வாதிகாரப் போக்கைக்கண்டித்துப்புரட்சி செய்தார். பிறகு 1900-ஆண்டு சர்வகலாசாலையில், மூன்று பட்டங்கள் கிடைக்கப்பெற்றார். டாக்டர் பட்டமொன்றும், சட்டப்படிப்பிலும், சமூக விஞ்ஞானத்திலும் தனித்தனியே பட்டம் பெற்றார்.

சட்டப்படிப்பை முடித்துக் கொண்ட காஸ்ட்ரோ வழக்கறிஞர்

தொழில் நடத்தவில்லை. மாறாக, அவ்வப்போது நீதிகிடைக்கப் பெறாத உழவர்களுக்கும், தொழிலாளர்களுக்காக வாதாடி வெற்றி பெற்றார். அப்பொழுது ஜனாதிபதி பாடிஸ்டா பதவிபெற்ற நேரம். பொதுத்தேர்தல் நடைபெற நாடெங்கிலும் ஆயத்தம் நடைபெற்றுவந்தது. காஸ்ட்ரோ, தேர்தலில் ஜனாதிபதியின் எதிர்க்கட்சி உறுப்பினராக நின்றார். ஆனால் எதிர்பாராவிதமாய்த் தேர்தல் மறுக்கப்பட்டது. ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிக்கத் துணிந்த காஸ்ட்ரோ, நண்பர்களின் உதவிகொண்டு புரட்சி செய்தார். புரட்சியின் விளைவால் அவர்தம் நண்பர்களில் சிலர் சர்வாதிகார பலிப்பீடத்தில் கொல்லப்பட்டனர். தோல்வி கண்ட வீரர் சளைத்தாரில்லை.

புரட்சிக்கு வித்தான்றிய காஸ்டிரோ கைதுசெய்யப்பட்டார். காஸ்ட்ரோவின் தமையனும், தமக்கையும் அரசாங்கத்தினரால் சித்திரவதை செய்யப்பட்டனர். அதன் விளைவால் காஸ்ட்ரோ தன்னுடைய தமையனாரை இழந்தான். தமக்கை தப்பியோடிவந்து புரட்சியணிக்குத் தலைமை தாங்கினார். சந்தாமேரியா என்ற பெயர் கொண்ட அந்த நங்கை இன்று கியூபா நாட்டு மக்களின் உள்ளத்தில், நீங்காத இடம்பெற்றுத் திகழ்கிறாள். அரசாங்கத்தினரால் புரட்சி செய்தோரை, மாய்க்கமுடிந்ததே தவிர, புரட்சிக் கருத்துக்களை அழிக்க இயலவில்லை. மாறாக கருத்துக்கள் மக்களிடையே அதிகமாகப் பரவலாயின.

1955-ஆண்டு அரசியல் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட்டனர். விடுதலையான காஸ்ட்ரோவும், தம்பியான, ரால்காஸ்ட்ரோவும், மறுமுறை தங்களுடைய கருத்துக்களுக்கு ஆதரவு தேடத்தொடங்கினர். வீரர்கள் பலர் உறுதுணையுடன் புரட்சிசெய்து ஜனாதிபதியைப் பதவியைவிட்டு இறக்குவதென உறுதிபூண்டு செயல்படலாயினர். அவர்களுடைய உயிரொத்த கொள்கை என்னவெனில் "விடுதலை வாழ்வு அல்லது வீரச்சாவு" என்பதேயாம்.

1956-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் நாள், புரட்சி செய்வதெனத் திட்டமிட்டு, வீரர்கள் பலர் ஒன்று திரண்டனர். சாண்டியாகோ என்ற அந்நகரில் உள்ள புரட்சித் தலைவர் பிராஸ்பைஸ் என்பவரின் உதவி கிட்டியது. புரட்சி தினத்தன்று காஸ்ட்ரோ தன்னுடைய வீரர்களை அழைத்துக்கொண்டு "கிராமா" என்ற போட்டார்ப்படகில் வந்து பிராங்பைஸ் உடன் புரட்சியில் கலந்து கொள்வதென நிச்சயிக்கப்பட்டது. நவம்பர் 30-நாள் பைஸ் தன்னுடைய வீரர்களின் துணைகொண்டு, காஸ்ட்ரோ அங்கு வந்தடைந்திருப்பார் என்ற நம்பிக்கையின் பேரில் புரட்சியைத் துவக்கினார். ஆனால் எதிர்பாராத விதமாகக் கடலில் எழுந்த புயற்காற்றினால் படகு இருநாள் தாமதிக்கப்பட்டது. இடையிலேபுரட்சி, இராணுவத்தாரால் அடக்கப்பட்டது. புரட்சித் தலைவர் பைஸ் உயிர் தப்பினார். தாமதித்து வந்த கப்பலி இராணுவத்தாரால் பிடிக்கப்பட்டது. கடல் நோயினால் பலர் இறந்துபட்டனர். பதினேழு பேர் மட்டுமே கைதுசெய்யப்பட்டனர்.

காஸ்ட்ரோவும், மற்றும் பதின்மூன்றுபேரும் நோயினால் இறந்தோர் போன்று நடித்துத் தப்பினர். பிக்கோ டர்கியூனோ என்ற இடத்தை அடைந்தார். அங்கிருந்தவாறே சாண்டியாகோவிலுள்ள நண்பர் பைஸ்க்குச் செய்தி அனுப்பி, அவர் விருப்பத்தை அறிந்தார். புரட்சி வீரரின் எண்ணிக்கை அதிகரிக்கலாயின. அதற்குக் காரணம், உள்நாட்டில் நிலவி வந்த அவலநிலையும் அநீதியும் தான். பாடிஸ்டாவின் அடக்குமுறை ஆட்சியினால் அல்லலுற்ற மக்கள் புரட்சிவீரர்களுக்கு ஆதரவு தரலாயினர். அரசாங்க வேலையிலுள்ளோர் புரட்சிப்படையினருக்கு மறைமுக அனுதாபத்தைத் தெரிவித்தனர். புகைவண்டிப் பாலங்கள் தகர்த்தெறியப்பட்டன. தபால் தந்தி போக்குவரத்து வசதிகள் துண்டிக்கப்பட்டன. நெடுஞ்சாலைகளெல்லாம் மரங்களினால் அடைக்கப்பட்டன. நாடெங்கிலும் உள்ள விடுதலை வீரர்கள் ஒன்று திரண்டெழுந்தனர். புரட்சிப்படைமூன்று அணியாகப் பிரிக்கப்பட்டுப் போர் புரியலாயின. இராணுவத்தினர் தங்கள்பால் உள்ள ஆயுதத்தின் உதவிகொண்டு புரட்சி வீரர்களைச் சுட்டு வீழ்த்தினர்.

விடுதலைப்போரின் துவக்கத்தில் புரட்சிப்படை தோல்வியே கண்டது. பிறகு முதல்வெற்றி மான்சானிலோ என்ற நகரில்கிட்டியது. 150-இராணுவ வீரர்கள் கைதாக்கப்பட்டனர். கைதிகளை ஒருங்கே நிறுத்தி, காஸ்ட்ரோவின் புரட்சிக்கருத்துக்கள் விரித்துரைக்கப்பட்டன. பின்பு இராணுவ வீரர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்த முறையான போர்த் தந்திரத்தால் தன்னுடைய கொள்கைக்கும் ஆதரவு தேடிக்கொண்டார். அன்றியும் பகைவரின் படைபலத்தையும் குன்றச்செய்தார், புரட்சிவீரர் தலைவன் பைடல்காஸ்ட்ரோ.

நாடெங்கிலும் அரசை எதிர்த்து புரட்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பொது மக்களின் உதவிகொண்டு இராணுவத்தினர் போக்கை எளிதாகப் புரட்சிப்படையினர் அறிந்தனர். புரட்சிக் கருத்துக்கள் இராணுவ வீரர்களின் நெஞ்சிலே விழிப்புணர்ச்சியையும் எழுச்சியையும் உண்டாக்கின. அவர்கள் புரட்சிவீரர்களை எதிர்த்துப்போரிட விரும்பவில்லை. ஆதலால் போர் நடக்கும்போது இராணுவ வீரர்களின் துப்பாக்கிகள், தாறுமாறாகக் குண்டுகள் காலியாகும்வரை சுடப்பட்டன. பின் புரட்சி வீரர்களிடம் மகிழ்ச்சியுடன் அடிபணிந்தனர். மற்றும் புரட்சி வீரர்கள் கட்டுப்பாடாக யாவரும் மது அருந்தாமல் மக்களிடம் தாறுமாறாக நடக்காமல், கடமை, கண்ணியம் இவற்றைக்காத்து நடந்தனர். ஜனாதிபதியின் இரகசியப் படையினரும், உளவாளிகளும் இரக்கமின்றித்தண்டிக்கப்பட்டனர். காஸ்ட்ரோ தனியிடத்திலிருந்து வானொலிமூலம் புரட்சிவீரர்களுக்கு கட்டளை பிறப்பித்தவண்ணமிருந்தார். ஒவ்வொரு நகராகப் புரட்சிப் படை வாகைசூடி மகிழ்ந்தது. சாண்டோ கிளாரா என்ற நகரில் நடந்த போரில் தோற்ற ஜனாதிபதி வானவூர்தி மூலம் நாட்டைவிட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறித் தப்பினார்.

அன்று 1959ம் ஆண்டின் முதல் நாள், கியூபா நாட்டின் சரித்திரத்திலேயே பொன்னாள் எழுதப்பெற்ற நன்னாள். அந்நாளில் பைடல் காஸ்ட்ரோ புரட்சிப் படையினருக்குத் தலைமை தாங்கித் தலைநகரான ஹவானவை நோக்கிப் பீடுநடையிட்டார். முன்பே புரட்சிப் படையின் ஒரு அணியினால் வெற்றி கொள்ளப்பட்டதை அறிந்து மகிழ்ந்தனர். நகரெங்கணும் உள்ள மக்கள் புரட்சித் தலைவன் காஸ்ட்ரோவைமகிழ்ச்சியுடன்வரவேற்றுத் திறந்த காரில் நகரின் தெருக்க

ளெல்லாம் சுற்றி அழைத்துச் சென்றனர். இராணுவத்தின் கோட்டையாகிய காம்ப் கொலம்பியாவின் கதவைத் திறந்து உட்சென்ற காஸ்ட்ரோவை மக்கள் இனிது வரவேற்றனர். அங்கு ஜூலைத் திங்கள் 20ம் நாள் விடுதலை நாளாகச் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

நாடெங்கிலும் ஆட்சி திருத்தியமைக்கப்பட்டது. நாட்டிலுள்ள சீர்கேடுகள் திருத்தி ஒழுங்குபடுத்தப்பட்டன. யூரிஷியா என்பவர் ஜனாதிபதியாகப் பதவி பெற்றார். இதில் வியப்பென்னவெனில் யூரிஷியா என்பவரை, காஸ்ட்ரோவுக்கு இரண்டு திங்களாகத்தான் தெரியுமாம். பைடல் காஸ்ட்ரோ பிரதம மந்திரியாகப்பதவியேற்று நாட்டை செவ்வனே ஆளுவதில் நாட்டங்கொண்டார். இலஞ்சம் அடியோடு ஒழிக்கப்பெற்று வருகின்றது. 18 திங்களுக்குப்பின் பொதுத்தேர்தல் நடத்துவதற்கு ஆயத்தம் நடந்து வருகிறது. புரட்சி வீரன் பைடல் காஸ்ட்ரோ தன் வாழ்நாளில் கண்ட கனவுகள் எல்லாம் நினைவாக்கப்பட்டன. நாட்டைப் பண்படுத்தும் வேலையில் ஜனாதிபதியும், பிரதமர் காஸ்ட்ரோவும் ஒத்துழைத்து வருகின்றனர். காளான்களும், புல்லுருவிகளும், முட்செடிகளும் களைந்தெறியப்படுகின்றது. அந்நிய உதவிகொண்டு பலபுதிய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறிய தீவான கியூபா கிளர்ந்தெழுந்து அடிமைத்தளையிலிருந்து விடுபட்டுத் தனித்து இயங்கும்போது, சீரும் சிறப்புமாக இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னேயிருந்து உலகிற்கு அரசியலுணர்வைப் போதித்து வந்த திராவிடம் பிரிந்தால் தனித்து இயங்குமா? சோறு கிடைக்குமா என்பவர்களுக்கு கியூபா நாட்டின் விடுதலை வரலாறு ஒரு உதாரணமாகும். திராவிடம் பிரிந்தால் தன்நிகரற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. நாட்டினிலே நமக்கு நல்லதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது. மக்களிடை விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. மழைநீர் கண்ட மல்லிகை மாலைநேரம் வந்துவிட்டால், மலரா மலர் சென்றுவிடும். திராவிட மலர் அரும்பாகியிருந்த நிலைமாறி விரிந்து உலகெங்கும் மணம் வீசும் என்பது திண்ணம்.

# நன்றிகெட்ட உலகமே!

[ அட்சயன் ]

உலகைத் திருத்திய உத்தமர்கள், மக்கள் நல்வாழ்வுக்காகவே பணி புரிந்தவர்கள், தன்னலம் கருதாது மக்கள் நலனே "மகேசன்" பணியெனக் கருதிய பெரியவர்கள், வாழ்வின் அடித்தளத்திலே உழலும் மக்களின் வாழ்வுக்காகப் பாடுபட்டவர்கள்— ஆகிய உத்தமர்களுக்கு உலகம் காட்டிய நன்றி என்ன?

"அறியாமைச் சேற்றிலே உழன்றுகொண்டிருக்கிற மக்களை மேலே தூக்கிவிட எவனொருவன் தன் கையைக் கொடுக்கிறானோ அந்தக் கையையே, அவனையே கூட அந்த அறியாமை இழுத்துக்கொண்டு விடுகிறது! ஆயினும் அவன் துணிந்து கையைக் கொடுத்து விடுகிறான். ஏன்? அவர்களோடு விழுந்து, உழன்று, அப்படியாவது அந்த அறியாமைக் குட்டையை கொஞ்சம் கலக்கி விடலாம் என்ற எண்ணந்தான். கலக்கம் ஏற்பட்டால் தெளிவு உண்டாகுமல்லவா?"

இவ்வளவு துணிவுடன் மக்கள் மன்றத்திலே நற்கருத்துக்களை விதைத்தவர்களுக்கு, உலகம் என்ன நன்றி காட்டியது? அவனைத் தூற்றியது; கல்லால் அடித்தது; கழியால் தாக்கிற்று; சிறையில் அடைத்தது; கடைசியில் தூக்குமரத்திலேயே நிறுத்தி விடுகிறது! நிறுத்தியபின் சும்மா இருக்கிறதா? இல்லை. கைகொட்டிச் சிரிக்கிறது. இதுதான் உலகம் அம்மேதைகளுக்குக் காட்டிய நன்றி!

"மக்களாகவும், மக்களில் ஒருவனாகவும் இருக்கவேண்டிய வாய்ப்பு எவனுக்கு இருக்கிறதோ, பொது மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்று வாழவேண்டுமென்கின்ற எண்ணம் எவனுக்கு இருக்கிறதோ, எவனுக்கு உயர்ந்த நோக்கங்கள் இருக்கின்றனவோ, அவசியமாயிருக்கிறவரை மக்கள் மன்றத்திற்கு உபயோகமுள்ளவனாயிருக்கவேண்டுமென்கிற கருத்து எவனுக்கு இருக்கிறதோ, அவன் தான் சிறந்த அரசியல் வாதி."

இத்தகு முறையில் இற்றை நாளுக்கும் பொருந்தும் வண்ணம் சீரிய அரசியற் கருத்தினைப் போதித்தானே— அவன்— கிரேக்கப் பேரறிஞன்— சாக்ரடீஸ்—அவனுக்கு காட்டிய நன்றி என்ன?

ஒரு கோப்பை நஞ்சு! அறிவுத் தெளிவற்று உழன்ற மக்களிடத்தே அறிவு ஒளிபெறப்பாடுபட்ட அம்மகான், அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், மன்னர்கள்— இத்தனை "அறிவாளிகள்" முன்னிலையிலே "அவன் நஞ்சுண்டு மடிய வேண்டும்" என "நல்ல தீர்ப்பு" அளித்து 'நன்றி' தெரிவித்துக் கொண்டது அன்றைய உலகம்.

தெய்வீக நாடகம் என்ற மகா காவியத்தை எழுதி இன்றைய அறிஞர் உலகத்தால் பெரும் புகழுக்குப் பாத்திரனான மகாகவி, இத்தாலிய நாட்டின் இலக்கிய மேதை தாந்தே என்பானுக்கு, அந்நாட்டினர் காட்டிய நன்றி, பிறந்த பொன்னாட்டை விட்டே வேட்டைநாய் போலத் துரத்தி அடித்தனர்.

பொதுவுடைமைப் பூங்கா, பாட்டாளிகளின் சொர்க்கம் என்றெல்லாம் பூரிப்புடன் கூறிப் பெருமை கொள்ளும், இரஷ்ய நாட்டின் அரசியலுக்கே வித்தூன்றியவரும, "மூலதனம்" என்ற ஒப்பற்ற உயரிய பொருளாதாரக் கொள்கைகளை விளக்கும் நூலினை எழுதிய மகான் காரல் மார்க்சிற்கு ஜெர்மனிய நாட்டில் இடமில்லை.

கி. பி. 1369—1415-ல் வாழ்ந்த பொஹிமியா தேசத்தின் மதச் சீர்திருத்த வாதியான ஜான் ஹஸ் என்ற பெரியாரை உயிரோடு தீக்கிரையாக்கித் தங்களது அன்பான

நன்றியைத் தெரிவித்து 'மகிழ்ந் தனர்.'

கி. பி. 1452—1498-ல் வாழ்ந்த இத்தாலிய நாட்டு மதச்சீர்திருத்த வாதி ஸவனரோலா என்பவன், ஆண்டவன் பெயரால் நடைபெறும் அக்கிரமங்களைக் களையப் பாடுபட்டு, மக்களின் மனத்திலே 'அன்பே தெய்வம்' என்ற நற்கருத்துக்களைப் பரப்ப முயன்றமைக்காக அவன் தூக்குமேடையில் நின்று தவித்திடலானான்

அரசியல் தந்தை என்று எவன் புகழப்பட்டானோ, ஆடம்பரத்தின் பகட்டுக்கும், அதிகாரத்தின் உறுமலுக்கும் மத்தியில் வாழ்ந்து, ஏழைகளின் நல்வாழ்வுக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தானோ, எவனுடைய எழுத்துக்கள் 'பிரஞ்சுப் புரட்சி' என்ற பெருநெருப்பை மூட்டியதோ, எவனுடைய நூலான சமுதாய ஒப்பந்தத்தைப் படிப்பது ஒரு பெருமையென உலகம் எண்ணிற்றோ—அவன்—ரூஸோ--பிரஞ்சுப் புரட்சியின் காரணஸ்தன்—சுவிட்சர்லாந்து நாட்டு மக்களால் நாடு கடத்தப்பட்டவனல்லவா!

"உங்கள் சத்துருக்களை மன்னியுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களைச் சிநேகியுங்கள், உங்களின் பகைவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துகிறவர்களுக்காகத் துதியுங்கள்" என்ற அருள் வாக்கினை, அன்பினை, மக்கள் மன்றத்திலே நிரப்பிய பெருமான் இயேசுவிற்கு கிடைத்த பரிசு என்ன?

உயிரோடு அம்மகான் சிலுவையில் அறையப்பட்டார்.

தன்னெறி காணாது திசை கெட்டுத் தடுமாறிக் கிடந்த மக்களை, "இஸ்லாத்தில்" இணைத்து, அன்பு மார்க்கத்தைப் போதித்து, அவனியிலேயே சிறந்த மதக் கொள்கையினைக் கொண்டது "இஸ்லாம்" என நேசிக்கும் அளவிற்குத் தொண்டாற்றிய பெருமானார் நபிகள் நாயகம் அவர்கள் அற்றை நாளில் குருஷிகள் என்பவர்களால் பெற்ற துன்பம் சொல்லிட இயலுமோ?

அன்றைய நாளில் மட்டுமா அல்லல் பட்டார்கள் அறிஞர்கள்; இல்லை. நாகரிகத்தின் மேல்தட்டில் நிற்பதாகக் கூறிடும் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மக்கள் தொண்டர்களுக்கு மகாத்மாக்களுக்கு உலகம் என்ன நன்றி காட்டிற்று?

உலக உத்தமர் காந்தியின் உயிரைக் குடித்துக்கூத்தாடிற்று. மணிமண்டபம், திருவிழாக்கோலம், அரசியல் தலைவர்கள் பவனி, கலைஞர்களின் கண்பார்வைக்கெல்லாம் இலக்காகியுள்ளதல்லவா எட்டயாபுரம்— பாரதியின் பிறப்பிடம்—அப்பாரதி அன்று என்ன பெற்றான் இவ்வுலகிடமிருந்து. வர்ணாசிரம விரோதி, மத நிந்தகன், பைத்தியக்காரன் என்ற விருதுகள்! உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வறுமைத் தேளின் விஷத் தாக்குதலுக்கு ஆளாகி, மனம் நொந்து, ஆதரவற்று, அநாதியாகச் செத்தான்.

சீர்திருத்தம் பேசிடும் உத்தமர்களுக்கும் மக்களின் வாழ்வினைக் கருத்தாகக் கொண்டவர்களுக்கும் உலகம் என்றும் உயிரோடிருக்கையில் நன்றி செலுத்தியதே கிடையாது. மாறாக, அவன் மாண்டபின்பு, அவன் தொண்டு, பேச்சு, செயல் யாவற்றையும் போற்றி "ஆஹா ஊஹூ" என்று ஆடிப்பாடி மகிழ்கிறது.

ஏன் இந்த இழிநிலை என முற்காலந்தொட்டு ஆராய்வோமாயின், மக்களில் சாதாரணமாகப் பிறந்த ஒருவன், சுய உழைப்பாலும், சுய அறிவாலும் முன்னேறித் தன் நற்கருத்துக்களை மக்கள் மன்றம் ஏற்கும் அளவிற்கு புகழோங்க முற்படுகிறானே; அவனை, அந்த மக்களன்பினை—படித்தவர்கள்—பாமரர்களின் அபிஷேக ஆராதனையை என்றென்றும் வரவேற்பவர்கள், நான் பெரியவன் என்று பெயர் எடுக்கவேண்டும் என எண்ணிடுபவர்கள், அந்த உண்மை நலம் பேணும் உத்தமர்களின் முயற்சி கண்டு, வெதும்பிப் பொறாமையால் தாக்குண்டு எப்படியும் அவன் புகழை ஒழித்தாகவேண்டும், அல்லது அவனையேயாகிலும் ஒழித்துத் தீர்த்திடவேண்டும் எனத் தவறிய வழியில் சென்று விடுகின்றனர்.

சாக்ரடீஸ், ரூஸோ, இயேசு, காந்தி, பாரதி ஆகியவர்களின் கருத்தினிற்கு அன்று தலைவணங்கியவர்கள் ஏழைகள்தாம். பெரிய மனிதர்கள் என்ற 'பரிதாபப் பிராணிகள்' அத்தனையும் அவர்களது கருத்தினைக் கேலி புரிந்தவர்களே.

மதத்துறையில் நின்று, மதத்தின் பெயரால் மக்களை ஏய்த்துப் பிழைத்து வாழ்க்கையை வளப்படுத்த நம்பாசை கொண்டவர்கள், தங்களது திருட்டினை மக்களுக்குக் காட்டி, நல்வாழ்வுப் பணியைத் துவங்க முயற்சித்திடுமாறு, மக்களை விழித்தெழச் செய்பவனைக் கண்டு பொறாமை கொள்ளுகின்றனர். அரசியலின் பேரால் மக்களை அடிமைப்படுத்தி 'நாங்களன்றி உங்களுக்கு வேறு மார்க்கபோதகர் ஒருவருமில்லை" எனக்கூறி ஏமாற்றும் கயவர்கள், மக்களின் தொண்டர்களைக்காணும்போது பொறாமை கொள்ளுகின்றனர்.

இத்தகைய பொறாமை பெரும்பாலும் படித்தவர்களிடையே ஊறிக் கிடப்பதன் காரணமாகவே தான், உலகில் தோன்றும் அறிஞர்கள் அல்லலுக்கும், ஆபத்திற்கும் உள்ளாகிறார்கள். ஆனால் ஏதுமறியா ஏழை மக்களின் மனத்தில் அவர்கள் என்றென்றும் குடிகொண்டு வாழ்ந்திருந்தார்கள்.

இத்தகைய எதிர்ப்புக் கண்டு அஞ்சினார்களா? இல்லை. அயர்ந்து ஒதுங்கிவிட்டனரோ! அதுவும் கிடையாது.

'வாழ்க' என்ற வாழ்த்தொலியைக் கேட்டவுடன் "கனம்" ஏறித் தன் பணியினை மேலெழுந்தவாரியாகக் கவனிப்பவனும், 'வீழ்க' என்ற வீழ்ச்சிக் கணை கண்டு மக்களின் தொண்டினின்றும் ஒதுங்கி விடுபவனும், சமூக சேவைக்குத் தகுதியற்றவர்களாவர். வாழ்த்து வசவு இரண்டையும் பொருட்படுத்தாது, தன்தொண்டே இலட்சியம் எனக்கொண்டு நாட்டிற்கும், மக்களுக்கும் சேவைசெய்யத் தன் வாழ்நாள்முழுதையும் அர்ப்பணித்தார்கள். ஆனால், அத்தகைய உத்தமர்களுக்கு "நிகழ்காலம்" என்ற உலகம் நன்றிசெலுத்தவில்லை. மாறாக, நன்றி தெரிவித்ததெல்லாம் எதிர்காலந்தான்!

ஏ! நன்றிகெட்ட உலகமே! நயவஞ்சகர்களின் பாசறை நீ என ஒரு காலத்தில் இகழப்படுவாய். திராவிட நாட்டை, தாய்மொழியை, பொதுவாக மக்களை முன்னேற்ற வேண்டும் என விழைபவர்களுக்கு நீ இன்றே நன்றி செலுத்தி உன் கொடுமையைக் களை; செய்வாயா?

❋

# ★ மாஸ்கோ நதியில் ★ அட்லீயும் கேரளமும் ★ அட! பெண்களா!!

## நமது ஞானக்கண் நிருபர் பேட்டி

"ஓடுமிந்த ஆற்றினிலே
உல்லாச ஓடமேறி!
ஒன்றாக நீரும் நானும்
சல்லாப மொழிகள் பேசி!!"

கீதம் நின்றது! இரஷியமொழியில் ஒலித்துக்கொண்டிருந்த கீதம்!! மாஸ்கோவின் பக்கம் பறந்துகொண்டிருந்த என் பார்வையில் அழகு மிகுந்த மாஸ்கோ நதி பட்டது. அந்த நதியில். ஒரு அழகான ஓடத்தில், ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கிறார்கள், இரண்டுபேர். யாராவது காதலர்கள் போலிருக்கிறது, அதனால்தான் அவ்வளவு நெருங்கி உட்கார்ந்திருக்கிறார்கள், நம் வழியில் நாம்போவோம் என்று பார்வையைத் திருப்பினேன்! ஆனால் குரலைக் கேட்டதும், குருஷேவ் போலிருக்கிறதே, இந்த மனிதருக்குக்கூடத் தள்ளாத வயதில் ஏதாவது பொல்லாத காதல் முளைத்துவிட்டதோ, சரியான சமயம், கண்டுபிடித்து அகில உலகத்துக்கும் சொல்லவேண்டும் என்கிற ஆவலோடு இறங்கினேன். அவர் அருகில் அவ்வளவு நெருங்கி உட்கார்ந்திருந்தது, பெண்ணல்ல, ஆண்! அதுவும் யார் தெரியுமா? அமெரிக்க நாட்டு துணைத் தலைவர் நிக்சன் துரை!! என் கண்களையே நம்பமுடியவில்லை, என்னடா அமெரிக்காவும் இரஷ்யாவும் கீரியும் பாம்புமாக இருக்கிறது என்கிறார்கள், இதோ இரஷ்யத் தலைவரும் அமெரிக்கத் துணைத் தலைவரும் ஆனந்தமாகப் படகு சவாரி செய்கிறார்களே, இதென்ன ஆச்சரியம் என்று திகைத்து, என்னதான் பேசிக் கொள்கிறார்கள் என்பதைக் கேட்போமே என்று ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றுகொண்டேன். இருவரும் சிரித்துச் சிரித்துப் பேசினார்கள்! ஆற்றோரம், ஆனந்தமாகப் போய்க்கொண்டிருக்கும் இரஷியமக்களைப் பார்த்து, "நிக்சன்! அதோ பார்த்தீர்களா, எங்கள் மக்கள்...," என்றார், குருஷேவ். "ஆம்! ஆம்!! அவர்களைப் பார்க்க அழகாகவே இருக்கிறது," என்றார், நிக்சன். "அப்படியானால், எங்கள் வழி மோசம் என்று குறை காணமாட்டீர்கள்ல்லவா இனி?," என்றார் இரஷ்யத்தலைவர். உங்களுக்கு உங்கள் வழி பெரிது, அமெரிக்கர்களாகிய எங்களுக்கு எங்கள் வழி பெரிது. இருந்தாலும், இரண்டு வழியும், ஒன்றையொன்று பகைத்துக் கொள்ளாமல் வாழ முடியுமல்லவா?," என்றார், நிக்சன். ஒவ்வொருவர் முகத்திலும், சந்தேகத்தின் சாயலிருந்ததென்றாலும், இருவரும் அதைக் காட்டிக் கொள்ளாமல், சாமர்த்தியமாக அன்பைப் பொழிந்து கொண்டிருந்தனர்! அடடா, நமது நடிகர்களை விட, எவ்வளவு சிறந்தவர்களாக இருக்கிறார்களே இந்த அரசியல் நடிகர்கள் — அல்ல அல்ல தலைவர்கள் என்று நினைத்துக் கொண்டே, மாஸ்கோவுக்குள் புகுந்தேன்!! அங்கு ஒரு பிரம்மாண்டமான "அமெரிக்கக் கண்காட்சி" நடந்துகொண்டிருந்தது. இரஷ்யாவுக்குள் அமெரிக்கர் வருவதே பெரிய காரியம் எனும்போது, அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரப் பொருள்களெல்லாம் கொண்டுவரப்பட்டு ஒரு கண்காட்சியே நடபபது ஆச்சரியத்துக்குரிய சம்பவம்தானே? உள்ளே நுழையப்போனேன்! கண்காட்சிக்குள் நுழைய வேண்டுமானால், சர்க்கார் மூலம் டிக்கட் விற்கப்படுகிறது, அதை வாங்கிக் கொண்டுதான் நுழையலாம் என்றார்கள். கேட்டது பிசகு என்று, விர்ரென்று உள்ளே புகுந்து கண்ணோட்டம் செலுத்தினேன்! ஏராளமான இரஷ்யர்கள், அமெரிக்கப் பொருள்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு போனார்களே ஒழிய, யாரும் எதுவும் வாங்கவில்லை. நம்மூர் என்றால், ஆணும் பெண்ணும் விடுவார்களா இப்படி! ஏன் ஒருவரும் வாங்கவில்லையென்று விசாரித்தபோது, "கண்காட்சிக்குக் கொண்டுவந்திருக்கின்றோமே ஒழிய, வியாபாரத்துக்கு அல்ல. அமெரிக்காவில் எப்படி இயந்திர உற்பத்தி பெருகியிருக்கிறதென்பதைக் காட்டுவதே எங்கள் நோக்கம்" என்றார் ஒரு அமெரிக்கர்.

**எலியும் பூனையும் இணைந்தால்**
**ஏது உலகில் தொல்லை?**

என்று பாடியபடியே, அங்கிருந்து பறந்தேன் இங்கிலாந்துக்கு!!

*

உல்லாசமாக உட்கார்ந்து கொண்டிருந்தார், முன்னாள் பிரிட்டிஷ் பிரதமரான அட்லி. என்னைக் கண்டதும், கொஞ்சம் திகைத்தார். "என்னசார்! காஞ்சிபுரத்துக்கருகிலுள்ள படப்பை எனும் கிராமத்தில், நீங்கள் வந்தபோது கல்நாட்டுவிழா செய்த கூட்டத்துக்கு, வந்திருந்தேனே! ஞாபகமில்லை?" என்று அறிமுகம் செய்துகொண்டேன். "ஆமாமா! நான் கல்நாட்டிவிட்டு வந்தேனே, அந்தத் திடலில், இந்நேரம் பெரிய பெரிய கட்டிடங்கள் எழும்பியிருக்க வேண்டுமே. எல்லாம் கட்டியாயிற்றா?" என்றார், ஆவலோடு. ஒவ்வொரு தடவை, சென்னையிலிருந்து காஞ்சிபுரம் போகும்போதும் திடலாகவே பார்க்கிறேன், அந்த இடத்தை. எப்படி அவரிடம் பொய் சொல்வது? இதுதான், எங்கள் காங்கிரஸ் சர்க்காரின் சாமர்த்தியம் என்று சொல்லமுடியும்! எனவே, பேச்சை வேறு திசைக்கு மாற்ற நினைத்து, "கேரளாவில், டில்லி சர்க்கார் எடுத்திருக்கும் நடவடிக்கைபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன். எதிர்பாராத என் கேள்வியைக் கண்ட அட்லி, "இரண்டு மூன்று மாதங்களுக்கு முன், 'இந்தியாவின் அரசியல் நிலை' பற்றி நான் ஒரு விமர்சனம் செய்திருந்தேனே படித்தாயா?" — என்றார். இல்லையென்றேன். "அதில் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். வடக்கு, தெற்கு என்று வளர்ந்து வரும் உணர்ச்சி உருவாகி, எதிர்காலத்தில் இந்தியா பல பகுதிகளானாலும் ஆச்சரியமில்லை

யென்று. அந்தவேலே, நேருவுக்குப் பிறகுதான் நடக்கும் என்று நினைத்தேன்; நேருவே செய்துவிடுவார் போலிருக்கிறது'' என்ற அவர், சடேரென, ஆமாம் நீ எந்தக்கட்சியென்ருர். அவர்கையில், இங்கிருந்துசெல்லும் 'Homeland' இருப்பது தற்செயலாகக் கண்ணில் படவே, இந்தக் கட்சியென்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தேன்!!

* * *

ஒய்யாரிகள் பலர்! ஊர்வலம் வந்துகொண்டிருந்தார்கள்!! இதென்ன, மலேயாளத்துக்கு வந்துவிட்டோமே என்று, கீழே இறங்கிப் பார்த்தேன். கேரளமல்ல! சிங்கப்பூர்!! சித்திரப் பாவைகளோ, காந்த சக்தி உருக்கொண்டெழுந்த கனகமணி ஒவியங்களோ என்று திகைத்தேன். அவ்வளவு அழகான பெண்கள், ஒன்று சேர்ந்து ஊர்வலமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கென்ன குறை! என்ன வந்தது மொட்டவிழாப் பருவக்கட்டுடல் வல்லிகளுக்கு!! என்று, கேட்டேன். சிங்கப்பூரில் ஆட்சிக்கு வந்துள்ள புதுக் கட்சி, ஓட்டல்களிலும், மதுபானக் கடைகளிலும் பெண்கள் வேலே செய்வதை— அதிலும், இரவு நேரங்களில் பணிபுரிவதை— கட்டுப்படுத்துவதெனச் சட்டம் கொண்டு வர இருக்கிறதாம். இதனுல், விபசாரம் குறையும், தொல்லே பெருகாது என்பது அரசினர் கருத்தாம். "ஆமாம்! நல்லதுதானே, உங்களுக்கு. இதை ஏன், போய், எதிர்க்கிறீர்கள்?,'' என்று, நைசாக ஒரு பெண்ணிடம் போய்க் கேட்டேன். என்னே, ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "மானத்தோடு வாழ மன உறுதியிருந்தால் போதாதய்யா. சட்டமா வேண்டும்? எங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள எங்களுக்குத் தெரியும். சர்க்காருக்கு அதைப்பற்றி அக்கரை வேண்டாம்,'' என்று, கனல் கக்கினர், அவர்! "இருந்தாலும் ஓட்டல்களில், உங்களைப் பார்த்து ஆண்கள் பலவிதமாகப் பேசுவதும், சில்லரையைக் கையில் வைத்துச் சிரிப்பதும்...,'' என்றேன், நான். "அதனுல்! அவர்களுக்கு ஆனந்தம் வரும் என்று நினைக்கிறீர்கள். அந்த நினைப்பு நெருப்பாக, அவர்கள் சாப்பிட்ட பிறகு தட்டில் வைக்கும் இரும் தொகைகளே அதிகமாக வைக்கிருர்கள். நாங்களும் இளிச்சவாய் ஆண்கள் என்றெண்ணிக் கொள்கிருேம்! இதைத் தவிர, எங்கள் கற்பை அவ்வளவு எளிதில் இழக்க நாங்கள் என்ன ஏமாளிகளா?,'' என்ருர். பொல்லாத பெண்கள், என்று சொல்லிக்கொண்டு, என் ஊர் ஞாபகம் வரவே, ஒரு தாவு தாவினேன்!!

★

## மறைந்த பேராசிரியர்

# ம. கி. சண்முகம் அவர்கள்



சென்னைத் தியாகராயர் கல்லூரி

4-ம் பக்கத் தொடர்ச்சி

பிய முகமும் கொண்டவராய் வெளியில் வந்து காட்சி தந்திருக்கிறார்!!

*

'மெயில்' ஏடு, ஒரு சித்திரம் வரைந்திருக்கிறது. அச் சித்திரமே போதும், ஏன் கேரளத்தில் இவ்வளவு தூரம் நேரு அவர்கள் தலையிட்டிருந்தார் என்பதை விளக்க. அழகான தென்னஞ்சோலை நிரம்பிய இடம்! அங்கே என்னைத் தூக்கிக்கொண்டு போப்பா என்கிறது குழந்தை! தந்தையின் தோளிலே உட்கார்ந்திருக்கிறது! தந்தைக்கோ, மாற்றான் சோலையில் நுழைவது தகுமா சரியா என்கிற யோசனை வருகிறது மகளோ, 'நுழையப்பா, உள்ளே!' என்று பிடிவாதம் செய்கிறாள். யோசிக்கிறார் தந்தை. கடைசியில், பிடிவாதத்துக்குப் பணிந்து, உள்ளே நுழைகிறார். தந்தையின் இடத்தில் நேருவையும் மகளாக இந்திராவையும், தென்னஞ்சோலையாகக் கேரளத்தையும் குறிப்பிட்டிருக்கிறார் சித்திரக்காரர். "தந்தையைப் பணியவைத்தாள் மகள்" எனும்பொருளில், தலைப்பும் தரப்பட்டிருக்கிறது. மெயில், எதிர்க்கட்சி ஏடல்ல; காங்கிரசினை ஆதரிக்கும் ஏடு! அது இப்படியொரு ஓவியம் போட்டிருக்கிறது—கேரளத்தில், நேரு தலையிடக் காரணம் 'மகள்' என்று குறிப்பிட்டு விளக்குகிறது. இப்போது நேரு அவர்களுக்குக் காங்கிரசும் மகளும் ஒன்றுதான்! ஏனெனில், மகள்தான் காங்கிரஸ் தலைவி; காங்கிரசின் வளர்ச்சியும் தேய்வும் மகளுடைய கையில்தானிருக்கிறது!! அந்த மகளுக்காகத்தான் மலைபோலப் பேசிவந்த சனநாயகக் கொள்கைகளைச் சாவுக்குழிக்கு அனுப்பியிருக்கிறார் நேரு. இந்த இடம்தான், காங்கிரசாரிலும் பலரை, எரிச்சல் கொள்ளச் செய்திருக்கிறது! இப்படிச் செய்து நமக்கெல்லாம் அவமானம் உண்டுபண்ணிவிட்டாரே — சொந்தக் கட்சியென்பதற்காகத் துணிந்தா செய்வது துரோகம்—செச்சே! நாம் இதை அங்கீகரிக்கவில்லை என்பதையாவது காட்டிக்கொள்வோம் — என்கிற உள்ளத்து உணர்ச்சியால்தான், பிரோஸ் காந்தி போன்றோர், பாசத்தையும் குடும்ப நேசத்தையும் கூட, ஒருபுறம் ஒதுக்கிவிட்டுக் கண்டித்திருக்கிறார்கள் நேருவை!!

ஆனால் நாளைய தினம், வெளிப்படையாக இது பற்றிப்பார்லிமெண்ட் விவாதிக்கும்போது, இதேகருத்தினை வெளியிடுவரோ அல்லது கட்சிக் கட்டுப்பாடு கருதி வாய்மூடி மௌனியாகிவிடுவரோ; அறியோம்.

ஆயினும், ஒன்றுமட்டும் உண்மை, கேரளத்தில் டில்லி எடுத்த நடவடிக்கை, காங்கிரசாரிலும் பலருக்குப் பிடிக்கவில்லை என்பது தான்.

இப்படியொரு நடவடிக்கையை டில்லி மேற்கொண்டதும், இப்படிமேற்கொள்வதற்காகக் கேரளத்துக் காங்கிரசைத் தூண்டிவிட்டுக்கிளர்ச்சிகள் செய்யச் சொன்னதும், இந்த நாடகத்துக்குத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதிகளும், உலகத்துக்குத் தெரியாமலில்லை.

•

"எங்களை ஆளவிடாமல் செய்ய வேண்டுமென்று செய்த சதி"

— நம்பூதிரிபாட்.

•

"இப்படியொரு மாநில அரசின் உரிமைகளில் டில்லி தலையிட்டது, அக்கிரமம் அநீதி"

— முண்டசேரி.

*

"சனநாயகத்துக்கு முதல் சாவுமணி அடித்துக் காட்டுகிறது"

— அஜாய்கோஷ்.

•

"புதிய அழைப்பாளன் அரும்புகிறார். மாநிலங்களை ஒழித்திட முனையஆரம்பித்துவிட்டது, காங்கிரஸ்பீடம்"

— சுந்தரய்யா

•

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த பலதரப்பட்ட தலைவர்களும் இதுபோது டில்லிபீடத்தின் ஓரவஞ்சனையைச் சரமாரியாகக் கண்டித்திருக்கிறார்கள் இப்படி.

அப்படிக் கண்டிப்போரனைவரும் மாநில அதிகாரங்களுக்குள் மத்யபீடம் நுழைவது அக்கிரமம் என்று சொல்லாமலில்லை.

இந்த அக்கிரமம் நிரந்தரமாக ஒழியவேண்டுமென்பதனால்தான், ஒவ்வொரு பகுதியும் சுதந்திரம் பெற்று வாழவேண்டுமென்கிறோம் நாம்.

டில்லியின் சூதுமதியினை, டில்லியோடு குலவுவதே பெருமை எனஎண்ணுவோரும், புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள் இதுபோது.

பல கம்யூனிஸ்டுத் தலைவர்களின் கண்டனங்கள்—குறிப்பாகக் கேரளத்துத் தோழர்களின் குமுறல்கள்—இந்த உண்மையைத் தெளிவாக உணர்த்துகின்றன.

டில்லி,
ஒரே கட்சி ஆட்சியை, என்றும் நிரந்தரமாக்கிடச் செய்யும்
சதி பெரிது!
இச்சதி பலிக்காவிடில், சர்வாதிகார ஆட்சியைப் புகுத்தவும் அஞ்சாது!!

இந்த உண்மையினையே, இப்போதைய கேரளத்து நிகழ்ச்சி காட்டுகிறது. இது, முதலுமல்ல! முடிவுமல்ல!! வரவிருக்கும் பயங்கர ஆதிக்கத்துக்கு அடிக்கப்படும் முதல் மணியாகும்.

—[*]—

## இப்பொழுது நடைபெறுகிறது




M.M. புரொடக்ஷன்ஸ்

# அல்லி பெற்ற பிள்ளை

| டைரக்ஷன். | திரைக்கதை, வசனம். | சங்கீதம். | பாடல்கள். |
|---|---|---|---|
| K.சோமு | A.P.நாகராஜன் | K.V.மஹாதேவன் | A.மருதகாசி |

மூலக்கதை... பண்டிட் முகராம் சர்மா




## சென்னை பிரபாத், கெயிட்டி, சரஸ்வதி

### மற்றும் தென்னடெங்கும்.